தனி பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## 2008 - ஜூலை

ஆசிரியர்
…. அர்ஜூனன்

மரம் 8
கனி 8

# அறிந்து கொள்வோம்

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள் – சங்.119:1**

☆ ***சபை என்பது*** ஒரு கோவில் அல்ல - யோவேல் 3:5
சபை என்பது கூடிவருகிற கூட்டம் - ரோம.16:5
சபை என்பது கிறிஸ்துவின் நாமத்தினால் கூடிவருகிற (மக்களை) கிறிஸ்துவின் சபையார் - ரோம.16:16

☆ ***சுவாமி என்பது*** விக்கிரகத்தை குறிக்கும் சொல். கர்த்தரை சுவாமி என்று வேதம் அழைக்கவில்லை - யோனா 1:6; நியா.17:5
நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் - ஏசா.42:8
புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள் - எரே.10:2

☆ ***கிறிஸ்தவம் என்பது*** மதம் அல்ல. அது புதிதும் ஜீவனுமான மார்க்கம் - எபி.10:19
மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே - அப்.24:14
நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன் - அப்.22:4



**யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; எண்ணாகமம் 23:23**

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்


## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 ஜூலை - 2008 கனி - 8


ஆசிரியருரை

# கோடரி - AX



கோடரி கதையைப் பற்றி கேள்விப் பட்டு இருப்பீர்கள். ஒரு விறகு வெட்டி கோடரி ஒன்றை தவறவிட்டான் அப்பொழுது ஒரு தேவதை வந்து ஒரு தங்கக் கோடரியை எடுத்துக்கொடுத்தது, அது என்னுடையது இல்லை என்றான். பின்பு ஒரு வெள்ளி கோடரியை எடுத்துக்கொடுத்தது, அதுவும் என்னுடையது அல்ல என்றான். அதன்பின்பு இரும்புக் கோடரியை அந்தத் தேவதை எடுத்துக் கொடுத்தது இதுவே என்னுடையது என்றான். இது ஒரு கதை. இதை வழி வழியாக கேட்டு வந்திருக்கிறோம்.

ஆனால் பரிசுத்த வேதாகமம் உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை நமக்குப்போதிக்கிறது. அது என்னவென்றால், “தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான்மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். அதற்கு அவன்: போங்கள் என்றான். அவர்களில் ஒருவன்: நீர் தயவு செய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும் என்றான். அதற்கு அவன்: நான் வருகிறேன் என்று சொல்லி, அவர்களோடேகூடப் போனான்; அவர்கள் யோர்தான் நதியருகே வந்தபோது மரங்களை வெட்டினார்கள். ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை

வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப்பண்ணி, அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்" *(2இரா.6:1-7)*.

இச்சம்பவத்தில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் என்னவென்றால், தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் **தங்கள் சொந்தக்கைகளாலே வேலைசெய்திருக்கிறார்கள்** என்று முதல் இரண்டுவசனங்களில் படிக்கிறோம். பவுலும் அதையே தெசலோனிக்கேய சபைக்கு எழுதுகிறார் "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே" என்கிறார் *(2தெச.3:10)*. ஆக, ஒரு மனிதன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது. இன்றைக்கு அநேகர் வேலைசெய்யாமலே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் தங்கள் சொந்த வேலையைச்செய்து, சொந்த சாப்பாட்டை சாப்பிடவேண்டும். நெகேமியாவின் காலத்தில் அலங்கங்கள் கட்டப்படும்போது; "அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்" என்று நெகேமியா4:17-ல் வாசிக்கிறோம். இக்கட்டான சூழ்நிலையில் தங்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரும் என்று அறிந்து ஒரு கையிலே வேலை செய்துகொண்டு மறுகையிலே ஆயுதம் பிடித்திருந்தார்கள். இப்படி இரவு பகலாக கஷ்டப்பட்டபடியால் ஐம்பத்திரண்டு நாட்களுக்குள்ளாக கட்டிமுடிக்கப்பட்டது. ஒருவேளை அவர்கள் சோம்பலாக இருந்திருப்பார்கள் என்றால் எப்படி முடிந்திருக்கும்? இன்றைக்கு பலர் சபை கட்டிடத்தை யாராவது கட்டிக்கொடுத்தால் நலமாயிருக்கும். அமெரிக்க சகோதரர்கள் யாராவது உதவமாட்டார்களா? என ஏங்கிக்கொண்டு ஊழியம் செய்யும் அநேகர் உண்டு. இச்செய்தியை வாசிக்கும் அன்பான சகோதரனே, சகோதரியே நமக்கு வேண்டிய காரியங்களை நாமே பார்த்துக்கொள்ளவேண்டும். எலிசாவின் நாட்களில் தங்களுக்கு வேண்டிய உத்திரத்தை தாங்களே வெட்டினார்கள், கட்டினார்கள். அதைப்போல நெகேமியா காலத்தில் அலங்கங்களை பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கட்டினார்கள். நாமும் நமக்கு வேண்டியவற்றை நாமே பார்த்துக்கொள்ளவேண்டாமா?

ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப்பாருங்கள் என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நாங்கள் ஒரு முறை எங்கள் வீட்டு தோட்டத்திற்கு வந்துபோகிற இரு குருவிகளை கவனித்தோம் அவைகள் தங்கள் அலகுகளால் கொய்யாமரத்தில் நல்ல ஒரு இடத்தை தேர்வு செய்து ஒரு கூட்டை கட்டஆரம்பித்தது. பின்பு முட்டையிட்டு, அடைக்காத்து, குஞ்சுபொரித்து அதற்கு வேண்டிய உணவுகளை கொடுத்துப் பராமரித்தது. இத்தனை காரியங்களையும் அந்த இரண்டு குருவிகளே செய்து கொண்டது. மற்ற குருவிகள் விட்டுச் சென்ற கூட்டை அவைகள்

பயன்படுத்தவுமில்லை, மற்றகுருவிகள் வந்து நமக்கு உதவி செய்யும் என்று அக்குருவிகள் காத்திருக்கவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை. அதைப்போல யாராவது நமது குஞ்சுகளுக்கு உணவு கொடுக்கட்டும் என்று மற்ற குருவிகளை நம்பி தங்களுடைய குருவிகளை விட்டு செல்லவும் இல்லை. என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! குருவிகளே தங்களுடைய தேவைகளை தாங்களே சோம்பலில்லாமல் தேடிக்கொள்ளும்போது அவைகளைப் பார்க்கிலும் விசேஷித்த விதத்தில் படைக்கப்பட்ட மனிதர்கள் மட்டும் சோம்பலாக இருக்கலாமா? பவுல் சொல்லுகிறார்: "ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்" என்கிறார் (2தெச.3:8). நீங்கள் எப்படி சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்? உங்களுடைய சாப்பாடு உங்களுடைய கையின் பிரயாசமா அல்லது மற்றவர்கள் சேர்த்துவைத்ததா?

இரண்டாவது, தீர்க்கதரிசிகளின் புத்திரர்களில் ஒருவன் மரம் வெட்ட கடந்து செல்லும்போது ஒரு தேவ மனிதன் தங்களோடு இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதி எலியாவை நோக்கி: **நீர் தயவு செய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும்** என்றான். அன்பானவர்களே, நாம் பல இடங்களுக்கு கடந்து செல்கிறோம். ஒரு தேவ மனிதனை அங்கு அழைத்து சென்று இருக்கிறோமா? அல்லது நலமான காரியங்களுக்கு அவர்களை அழைத்து ஆலோசனை கேட்டிருக்கிறோமா? இல்லை. அதற்கு என்ன காரணம்? நமக்கு தெரியாததா, நாமே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வோம் என்ற துணிவு. ஒரு முறை சிறுவாணி டேம் சென்ற ஒரு குழுவினர் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பிக்கொண்டிருக்கும்போது அவ்வழியாக வந்த ஒரு காட்டு யானை அவர்களை துரத்த ஆரம்பித்தது அப்பொழுது அவரவர் தங்கள் உயிர் தப்பினால் போதும் என்று ஓட ஆரம்பித்தனர். ஒரு குடும்பத்தார் தங்களுடைய மகளையும் விட்டுவிட்டு ஓட ஆரம்பித்தனர் துரத்தி வந்த யானை தன் துதிக்கையால் அந்த பிள்ளையை பிடித்து ஒரே அடியாக அடித்து தூக்கி வீசியது. மரக்கிளைகளில் விழுந்த அந்த பிள்ளை அந்த இடத்திலே பரிதாபமாக இறந்துவிட்டது. அந்தப் பிள்ளையின் பெற்றோர்கள் மரத்தின் பின்புறத்திலிருந்தபடி ஒளிந்து கொண்டு பார்க்க முடிந்ததேயொழிய அவர்களால் தங்கள் பிள்ளையை காப்பாற்ற முடியவில்லை. ஏன்? அங்கு அவர்கள் ஆண்டவரை நோக்கி கூப்பிடவில்லை. மற்றொன்று அங்கே ஒரு தேவமனிதன் அவர்களை வழிநடத்தவில்லை. ஆகையால் இந்த விபரீதம் நடந்தது என நான் கருதுகிறேன்.

ஒரு முறை இயேசு லாசரு மரித்த பின்பு அந்த கிராமத்திற்கு போனார். அங்கே அவனுடைய சகோதரி மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, "ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்" என்றாள் (யோவா.11:21). இவளுக்கு இயேசுவின் மீது

அந்த அளவிற்கு நம்பிக்கை. அவளுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. லாசருவை எழுப்பி உயிர் உள்ளவனாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தினார். ஆண்டவர் இயேசு வானத்தையும் பூமியையும் படைத்ததேவனுடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு கொடுத்துக்கொண்டும், தம்முடைய ஜனங்களை வழி நடத்த தம்முடைய தாசர்களை தேர்வு செய்து அனுப்பிக்கொண்டும் இருக்கிறார். அவர் தம்முடைய சீஷர்களை கிராமங்களுக்கு அனுப்பும்பொழுது: "எவனாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும்போனால், அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படும்போது, உங்கள் கால்களில் படிந்த தூசியை உதறிப்போடுங்கள் என்றார்" (மத்.10:14). தேவ மனுஷர்களை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் அவர்களையும், அவர்களை அனுப்பினவரையும் ஏற்றுக்கொள்கிறார்கள் ஆகையால் அனுப்பினவருடைய ஆசீர்வாதம் அங்கே தங்கும். இல்லையேல் அவர்களிடமே திரும்பும். ஜெபிக்கும்போது கூட என் நாமத்தில் எங்கே இரண்டுபேராவது மூன்றுபேராவது கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவே இருக்கிறேன் என்கிறார். ஒருமனப்பட்ட இடத்தில் கர்த்தர் இருக்கிறார். "முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" என்கிறார் பிசங்கி. அதைபோல தீர்க்கதரிசிகளின் புத்திரர் நடுவில் தேவ மனிதனாகிய எலிசா இருந்தபடியால் அற்புதம் நடந்தது.

அந்த தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது அப்பொழுது அவன்: **ஐயோ என் ஆண்டவனே,** அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். அவன் தேவமனிதனை நோக்கி: ஐயோ என் ஆண்டவனே என்றான். அந்நாட்களில் தீர்க்கதரிசிகளிடம் தங்களுடைய கோரிக்கைகளை சொல்லுவார்கள். ஆகையால் இவன் எலிசாவிடம் இதை தெரிவித்தான். தேவ மனிதன் அந்த கோடரியை அற்புவிதமாக மிதக்கப்பண்ணினான். எந்த கோடரியை அந்த மனிதன் இழந்தானோ அதே கோடரியை திரும்பவும் பெற்றுக்கொண்டான். நாங்கள் 1995-ல் வீடு கட்டும்போது வாங்கிப்போட்ட சில அந்தர் கட்டட கம்பிகள் லாரியில் வரவில்லை நாங்கள் அந்த கடைக்காரரிடம் கேட்கும்போது அவைகளை அனுப்பிவிட்டதாக சொல்லி விட்டார். கஷ்ட காலத்தில் இருந்த நாங்கள் மிகவும் வேதனைப்பட்டோம். நாட்கள் உருண்டோடியது. நாம் என்ன செய்வது வேறே கம்பிகள் வாங்க பணம் போதாதே என்ற கவலையோடு கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தோம். என்ன நடந்தது தெரியுமா? அந்த கடைக்காரர் எங்களோடு போன் மூலம் தொடர்புகொண்டு எங்களிடம் மன்னிப்புகேட்டு, உங்களுக்காக என்னுடன் போனில் பேசியவர் யார்? அவரால் நான் தூங்கமுடியாமல் இரவு முழுவதும் கஷ்டப்பட்டேன் என்று சொல்லி எங்களுக்கு வந்து சேர வேண்டிய கம்பிகளை அனுப்பிவைத்தார். கர்த்தர் நமக்காக பேசுகிறவர். இழந்ததை மீட்டுக்கொடுக்கிறவர். ஒரு முறை படவில் சீஷர்களோடு கர்த்தர்

செல்லும்போது அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது படவு அலைகளினாலும் கடலின் பெருங்காற்று உண்டானதினாலும் மூடப்படத்தக்கதாய் இருந்தது, "அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்துபோகிறோம் என்றார்கள். அதற்கு அவர்: அற்பவிசுவாசிகளே! ஏன் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி; எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார் உடனே, மிகுந்த அமைதல் உண்டாயிற்று" (மத்.8:26,26). அங்கே ஆண்டவர் இருந்தபடியால் காக்கப்பட்டார்கள். அதைப்போல, "ராஜாவின் மனுஷன், ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வரவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப்போனான். அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்" (யோவா.4:49-51). அவன் சந்தோஷத்தோடே போய் தன் குடும்பத்தோடு விசுவாசமுள்ளவனாயிருந்தான்.

அன்பானவர்களே, யோர்தானிலே தவறிவிழுந்த கோடரி எலிசாவினால் மீட்டு தரப்பட்டது. அங்கே தேவ மனிதன் எலிசா இருந்தான். அந்த கோடரியை இரவலாக வாங்கினவன் சந்தோஷப்பட்டான். **உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கவந்த ஆண்டவர் இயேசு இந்த யோர்தான் நதியிலே யோவானால் ஞானஸ்நானம் பெற்று கரையேறியவுடன் இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று பிதாவானவர் சாட்சிகொடுத்தார்.** இயேசு சொல்கிறார்: "பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார் (யோவா.6:37-40). கோடரியைப் போல நீங்கள் மீட்கப்பட வேண்டுமானால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரும், பிரதான ஆசாரியரும், உலகத்தை நியாயந்தீர்க்கக்கூடிய நியாயாதிபதியுமாகிய இயேசுவுக்குச் செவிகொடுங்கள். அவர் உங்களை பாவத்திலிருந்து மீட்பார். அப்பொழுது நீங்கள் காக்கப்படுவீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும் – நீதிமொழிகள் 10:4

# பிரசங்கியாரின் இலக்குகள்
## Goals of Preachers

*-J.C.Choate*



ஒரு பிரசங்கியார் தனக்கென்று இலக்குகளை அமைத்து ஊழியம் செய்யவேண்டும். வாழ்க்கை கொஞ்சக்கால மாத்திரமே. அதில் நாம் செய்து முடிக்க வேண்டியவைகள் ஏராளம், நீங்கள் எந்தவிதமான திட்டமும் இல்லாதிருந்தால், நீங்கள் இலக்குகளை அமைக்காமல் இருந்தால், நீங்கள் அதிகமாக எதையும் சாதிக்க முடியாது. நீங்கள் யாரோடே போட்டி போடுகிறீர்கள் என்றோ அல்லது பேராசைப் படுகிறீர்கள் என்றோ இதற்கு அர்த்தம் அல்ல. உண்மை என்னவென்றால் நீங்கள் ஒரு கிறிஸ்தவர் உங்களால் முடியும் போது கர்த்தருக்கென்று எவ்வளவு செய்யமுடியுமோ (சாதிக்க) அவ்வளவு செய்ய வேண்டும் என்பதே. ஆகவே நீங்கள் உங்களுக்கென்று செயல்படும்படியான திட்டங்களை நியமித்து மிகச்சிறப்பானதை அடையும்படியாக செயல்படவேண்டும். நீங்கள் அதை விட மிகச்சிறப்பாகவும் செய்யமுடியும்,

உங்களுக்கு நான் சில இலக்குகளை ஊழியத்திலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய தனிப்பட்ட இலக்குகளைப்பற்றி முதலாவது நாம் பேசலாம்.

முதலாவதாக, உங்கள் வேதத்தை நன்றாகப் படித்து ஆவிக்குரிய பிரகாரமாய் வளரவேண்டும் என்று தீர்மானியுங்கள். இதை நீங்கள் பலவழிகளில் செய்யலாம். இதை நீங்கள் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வேதத்தை வாசித்து கற்றுக்கொள்ளலாம். ஒரு பிரசங்கியார் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படிக்கலாம். உங்கள் சமய சார்பற்ற கல்விக்காக உங்கள் பகுதியிலுள்ள கல்லூரியில் சேர்ந்து படிக்கலாம். மேலும் உலகின் பல பாகங்களில் இருந்து சகோதரர்கள் நடத்துகின்ற அஞ்சல் வழி வேதாகம பயிற்சிகளில் சேர்ந்து படிக்கலாம். அவைகளில் சில கல்லூரிபாடத்திட்டத்தைப் போன்றது, உண்மையாகவே நீங்கள் முன்னேற விரும்பினால் உழைக்க வேண்டும். அதிலே நீங்கள் பணம்செலவு செய்ய நேரிட்டாலும் அது மிகவும் பிரயோஜனமான ஒன்றே.

இரண்டாவதாக, உங்கள் குடும்பத்திற்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு வாரமும் ஒதுக்குங்கள் அந்த நேரங்களில் குடும்பத்தோடு ஒன்றாக வீட்டில் இருந்தோ அல்லது வெளி

இடங்களுக்குச் சென்றோ செயல்படுங்கள் நீங்கள் சுற்றுலா செல்ல விரும்பலாம் ஒன்றாக கடைவீதிக்கு சென்றுவர விரும்பலாம் நண்பர்களையோ, உறவினர்களையோ பார்த்து வரலாம், உங்கள் குடும்பத்தை அலட்சியம் செய்கின்ற அளவுக்கு உழைத்தால் எல்லாம் பாதிக்கப்படும்.

மூன்றாவதாக, உங்களுடைய தனிப்பட்ட நேரத்தை ஞானமாக பயன்படுத்துங்கள் அதை வீணாக்காதீர்கள் நீங்கள் அதை திரும்பப் பெற முடியாது. நீங்கள் பிரசங்கியாராக இருக்கும் பட்சத்தில் கர்த்தருடைய பணிக்கு அப்பாற்பட்டு தனியாக உங்களுக்கென்று இலக்குகளை நியமிப்பது கடினமான ஒன்று தான் ஆனால் உங்களுடைய ஊழியத்திற்கென்று சில இலக்குகள் இங்கே.

முதலாவதாக, ஒவ்வொருவாரமும் நிகழ்ச்சிகளை உங்களுக்கென்று ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதாவது நீங்கள் யாரை சந்திக்கப்போகிறீர்கள், எத்தனைபாடங்கள் எடுக்கப்போகிறீர்கள், எங்கே பிரசங்கம் செய்ய போகீறீர்கள் போன்றவற்றையும் இதற்கும் மேலாக செய்ய முடிந்தாலும் செய்யுங்கள். இல்லா விட்டால் திட்டமிட்டவைகளையாவது நிறைவேற்றுங்கள்.

இரண்டாவதாக, எத்தனைபேரை வருகின்ற மாதத்தில் நீங்கள் இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தப்போகிறீர்கள் என்கின்ற இலக்கை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். உங்களால் சந்திக்க முடியாத அளவுக்கு இலக்குகளை நியமித்து அவைகள் உங்களை அதைரியப்படுத்தும்படி விட்டுவிடாதீர்கள். நீங்கள் ஏற்படுத்தும் இலக்குகளை சந்தித்து வெற்றி பெறும்படியான நிலைகளை அமைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அந்த இலக்கைவிட அதிகமாக அடையும் பட்சத்தில் அடுத்த மாதத்தில்சற்று அதிகமாக திட்டமிடுங்கள். உங்களுக்கு எந்தவிதமான இலக்கும் இல்லாவிட்டால் செயல்கள் திசைமாறி அதை நீங்கள் அடையமுடியாமல் போகலாம். உங்களுக்கு நீங்கள் இலக்குகளை ஏற்படுத்துவதன்மூலம் அதிக முயற்சி எடுத்து செயல்படுவதற்கு அது ஒரு சவாலாக இருக்கும். முயற்சியுங்கள். அது சரியானபடி வேலை செய்யும் என்பதை நீங்கள் காண்பீர்கள் என்று நினைக்கின்றேன்.

மூன்றாவதாக, கர்த்தருடைய சபைகளை சில இடங்களில் ஸ்தாபிப்பது பற்றிய இலக்குகளை ஏற்படுத்துவதைப் பற்றி எப்படி? நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் தேவை உள்ள இடத்தைக் கண்டு பிடித்து அங்கு சென்று செயல்படுவதுதான். உண்மையாகவே கர்த்தருடைய உதவியோடு நீங்கள் செய்ய விரும்புவதைச் செய்ய முடியும். நம்மில் பெரும்பாலானோர் நம்முடைய இலட்சியங்களைத்தாண்டி செல்ல முடியாது.

நான்காவதாக, நீங்கள் வேறொரு நகரத்துக்கோ அல்லது அண்டை நாட்டுக்கோ சென்று சபையை ஸ்தாபிக்கும்படி ஒரு இலக்கைக்

கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட சில கனவுகளைக் கண்டு அவ்வழியில் ஏன் திட்டமிடக்கூடாது?

ஐந்தாவதாக, நீங்கள் இருக்கும் பகுதியில் நகரத்திலேயோ அல்லது நாட்டிலேயோ ஒரு பெரிய சபையை ஸ்தாபிக்க வேண்டுமென்ற இலக்கைக் கொண்டிருக்கலாம். கொரியாவில் உலகத்திலேயே பெரிய சபையை உருவாக்க வேண்டுமென்று கனவுகண்ட ஒரு நாமகரணசபையைச் சேர்ந்த ஒரு பிரசங்கியாரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அதற்காக அவர் கடினமாக வேலை செய்தார். அநேகர் அவர் தன்னுடைய நேரத்தை வீணாக்குகிறார் என்று எண்ணினார்கள் ஆனால் அவர் அதில் வெற்றிபெற்றார். நீங்கள் ஊழியம் செய்யும்பகுதியில் கர்த்தருடைய சபை மிகப்பெரிய அளவில் வளர்ச்சியடைய உதவிசெய்து, சபையிலிருந்து நாட்டுக்கு ஏன் உலகமுழுமைக்கும் சத்தியத்தை கொண்டு செல்லும் ஊழியர்களை அனுப்பும்படிச் செய்தால் எவ்வளவு பிரமாதமாக இருக்கும்.

ஆறாவதாக, நீங்கள் திட்டமிட்டு தன்னுடைய தேவைகளை யெல்லாம் சந்திக்கும்படியாக சுயதேவையைப் பூர்த்தி செய்யும் சபையாக சபையை உருவாக்கினால் அது மற்றவர்களுக்கு சிறந்த மாதிரியாக அமையும்.

ஏழாவதாக, நீங்கள் ஊழியம் செய்யும் சபை மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் கொண்ட ஒன்றாக இருக்கும்படிச் செய்ய வேண்டுமென்ற இலக்கை ஏற்படுத்தலாம். அது இன்னுமொரு தகுதியுள்ள இலக்காக இருக்கும். அது மற்ற பல சகோதரர்களையும் அதே திசையில் சிந்தித்து முயற்சிக்கச் செய்யும்.


நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றி (லூக்கா 9:23) அவருடைய ராஜ்யத்தை முதலில் தேடுவதை முதன்மையாக வைத்தால் நீங்கள் சாதிப்பதில் அளவே இருக்காது (மத்தேயு 6;33). உங்களை நீங்களே ஒரு எல்லைக்குட்படுத்தாதீர்கள் அல்லது பிறர் உங்களுக்கு எல்லைகளை ஏற்படுத்தும்படி அனுமதிக்காதீர்கள். காரிய சித்தி உள்ள பிரசங்கியார்கள் யார் என்றால் சுறுசுறுப்பாக இருந்து தரிசனத்தோடு செய்யும் செயல்களைக் குறித்த ஆர்வத்தோடு செயல்படுபவர்களே. அவர்களால் தங்கள் இலக்கை அடைய முடிவதற்கான காரணம் என்னவென்றால் அவர்கள் திட்டமிட்டு இலக்குகளை ஏற்படுத்தி அவைகளை அடையும்வரை அயராமல் உழைத்து அடைந்த பின்பு மற்ற இலக்குகளைத் தீர்மானிக்கிறார்கள்.

நீங்கள் உங்களுடைய பங்கை நிறைவேற்றினால் கர்த்தர் உங்களோடிருந்து, உங்களை ஆசீர்வதித்து, நீங்கள் வெற்றி பெறும்படி உதவிசெய்வார், கர்த்தரிடம் இந்தவிதத்திலும் முயன்று பாருங்கள் உங்களை அவர் ஏமாற்றவே மாட்டார்.

ஆராதிக்க நம்முடைய பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்

**Training Our Children To Worship**

*-Betty Burton Choate*





"போதி" என்ற வார்த்தை வாய்மொழி விளக்கத்தையும், பிரசங்கிப்பதையும், விவேகமான விவாதத்தையும் நம் நினைவிற்கு கொண்டுவருகிறது. "பயிற்றுவி" என்ற வார்த்தை ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ளும் வரை அதை பயிற்சி செய்வதன் அவசியத்தைக் கொண்டுவருகிறது.

நாம் ஆராதனையில் பயபக்தியுடன் கிரகித்துக்கொள்ளும் அனுபவத்தில் நம்முடைய பிள்ளைகளை பயிற்றுவிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நாம் நம்முடைய வேலையை சிறப்பாய் செய்தால், அவர்களுடைய சுபாவம் ஒரு இனிமையான தேவனோடு தங்கள் வாழ்நாள் முழுவதும் நெருக்கமுடையதாக இருக்கும்; நாம் அவர்களை ஒரு ஜீவனற்ற வடிவில் மட்டும் பயிற்றுவித்தால் நாம் அவர்களுடைய பெரிதான பொக்கிஷத்தை கொள்ளையடிக்கிறவர்களாயிருப்போம்.

ஒரு குறிப்பிட்ட நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும்படிக்கு அம்மைகுத்திக் கொள்ளுவது சாத்தியமானது. அடிக்கடி செயலற்ற அம்மைப்பால் சரீரத்தில் இலேசான அரிப்பு அல்லது காய்ச்சல் போன்ற எதிர்தாக்குதலை ஏற்படுத்தும் என்பது உண்மை. ஆனால் அம்மை குத்திக்கொள்ளுவதும் இலேசான எதிர்தாக்குதலும் உயிருக்கு அந்த வியாதி வராதபடி செய்யும் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது.

அஜாக்கிரதையாக, நம்முடைய குழந்தைகளை அவர்களுக்குள் ஆவிக்குரிய வாழ்வை கொண்டுவர முடியாத கிறிஸ்தவத்தின் ஒரு வெறுமையான அமைப்பிற்கு அவர்களை விற்றுப் போடுகிறவர்களாக ஆவிக்குரிய வகையில் அவர்களுக்கு அம்மை குத்தி விடுவோம். ஒரு வேளை நாம் அவர்களை ஆராதனைக்கு அழைத்துச் செல்லாமல்; ஒருவேளை நாம் சில நேரங்களில் வேதாகமத்தை வாசித்துக் காட்டலாம்; ஒருவேளை நாம் நேர நேரத்திற்கு ஒரு முறையான ஜெபத்தை சொல்லிக் கொடுக்கலாம். அதன் விளைவு, அவர்கள், தாங்கள் உண்மையாகவே கிறிஸ்தவத்தை பயிற்சிக்கிறோம் என நினைக்கலாம், ஆனால் அது வாழ்க்கைக்கு ஒரு உள்ளான உந்துதலாயில்லாததினால், அது அவர்களிலே கிரியை செய்வதில்லை. இப்போது அவர்கள் கடமையினின்று விடுபட்டவர்கள். அவர்கள்

உண்மையாக வாசிக்க வாஞ்சையில்லாதவர்களாக போதுமான அளவு வாசிக்கிறார்கள்; அவர்கள் முறையாக ஜெபத்தினால் இளைப்படைந்து விட்டார்கள், ஏனெனில் அவர்கள் விரும்புகிறதை தேவனிடம் கூற இருதயத்திலிருந்து அவர்கள் வார்த்தைகளைக் கொண்டிருக்கவில்லை, உருவ வழிபாட்டில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் செல்ல தங்களுடைய இருதயங்களில் வாஞ்சையில்லாதபடியினால், அவர்கள் ஆராதனை முழுவதும் கண்ணயர்ந்து அல்லது விளையாடுகிறார்கள்.

நாம் எவ்வாறு முழு இருதயத்தோடு தேவனை ஆராதிக்க நம்முடைய பிள்ளைகளை பயிற்றுவிப்பது?

1. முதலாவது, அவர்கள் மிக இளமையாக இருக்கின்றபொழுது, நாம் கர்த்தருடைய நாளில் வரவிருக்கிறதான ஆராதனை நேரத்தைக் குறித்து வாரத்தின் நாட்களிலும் இரவில் பேசி, தொழுகை செய்வதினால் ஏற்படக்கூடிய நன்மையின் மேல் உள்ளான மகிழ்ச்சியை நமது முகமலர்ச்சியில் வெளிப்படுத்தி நமது பேச்சில் தெரிவிக்க வேண்டும்.

2. இரண்டாவது, நாம் குடும்ப ஆராதனையை வீட்டில் குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுத்தி அவர்களை பயபக்தியுள்ள நடக்கையுடன் எந்த நேரத்திலும் கலந்து கொள்ள பயிற்றுவிக்க வேண்டும்.

3. நாம் பொதுவான ஆராதனைக்கு முன்பாக நம்மை ஆயத்தப்படுத்துகிறோம் என்பதை நமது மாதிரியின் மூலமும் நம்முடைய தெளிவான வார்த்தைகளின் மூலமும் போதிக்க வேண்டும். நாம் நம்முடைய மனதையும் சரீரத்தையும் சுத்திகரித்துக் கொண்டு தேவன் மேல் கொண்டுள்ள பயபக்தியை வெளிப்படுத்துகிறதான உடைகளை அணிந்து கொள்ளவேண்டும். நாம் சரீரத்தில் சரியான ஆயத்தத்தோடு இருக்கும்போது, ஆராதிப்பதற்கு இது ஆவிக்குரிய தேவையான ஆயத்தத்தை உருவாக்க எளிதாக இருக்கிறது.

4. ஆராதனையிலே, மீண்டும் நாம் நம்முடைய சொந்த நடக்கையின் மூலம் பயிற்றுவிக்கிறோம். நாம் முழு இருதயத்தோடு பாடினால், நாம் பயபக்தியுடன் கவனித்தால், விசுவாசத்துடன் ஜெபித்தால், தேவனுடைய ஊழியத்தை தாங்க தாராளமாகவும் சுதந்திரமாகவும் கொடுத்தால் - மேலும் இவையெல்லாவற்றைக் குறித்தும் வாரம் முழுவதும் பேசி திட்டமிட்டு அனுதின வாழ்க்கையில் ஒன்றிப்போனது போல விளக்கமளித்தால் - அவர்கள் பொதுவான ஆராதனையில் சிறப்பாய் இருப்பது போல் அனுதின வாழ்வின் ஒரு பகுதியாகவே நம்முடைய பிள்ளைகளுக்கு அது மாறிவிடும்.

5. ஆராதனையிலேயே, நாம் நம்முடைய குழந்தைகளை பாடலில் பங்குகொள்ளச் செய்ய விரும்பினால், நாம் அவர்களுக்கு ஒரு

புத்தகத்தைக் கொடுத்து பக்கங்களைக் கண்டுபிடிக்க உதவி, மேலும் அவர்கள் பாடலின் வார்த்தைகளைத் தொடர அவர்கள் தாங்களாகவே அவைகளைச் செய்வதற்கு முன்னதாக உதவிசெய்வோம்.

6. குழந்தைகள் தங்களுடைய இளமைப் பருவத்திலிருந்தே தங்களுக்கென சொந்தமாகவேதாகமத்தைப் பெற்றிருப்பது அவசியம். அவர்கள் அந்த புத்தகத்தை சரியாக பராமரிக்கவும், மரியாதையுடனும் அன்புடனும் அதை ஆராதனைக்குத் தவறாமல் தங்களோடு எடுத்துச் செல்லவும் போதிக்கப்பட வேண்டும்.

7. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகள் ஆராதனை வேளையில் என்ன செய்கின்றார்கள் என்ற உணர்வுடனிருக்க வேண்டும். நான் 8 மற்றும் 10 வயது குழந்தைகள் திருவிருந்தை நினைவு கூருகிற வேளையில் மீண்டும் மீண்டும் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருப்பதை பார்த்திருக்கிறேன். நான் அவர்கள் பாடுவதற்கு பதிலாக விளையாடிக்கொண்டும், அவர்கள் ஜெபங்களிலிருந்தும் பாடத்திலிருந்தும் என்ன அறிந்து கொள்ள முடிந்தது என்று விழிப்புடன் ஜாக்கிரதையாய் ஆராய்ந்து பார்ப்பதற்குப் பதிலாக தூங்கிக்கொண்டுமிருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

பிள்ளைகள் முதியவர்களை போலிருக்கிறார்கள்: நாம் அறிந்து கொள்ளுவதற்கு முழுத் தகுதியுடையவர்களாய் மாறுவதற்கு முன்னேயும் சாதாரணமாக ஒரு பழக்கத்தை உருவாக்குகிற காரியங்களை அடிக்கடி செய்வதன் மூலமும் நாம் அதிகமான காரியங்களைக் கற்றுக் கொள்கிறோம். இளம் பருவத்தில் பிள்ளைகள் முழுவதும் புரிந்து கொண்டு அர்த்தத்துடன் ஆராதிக்க தங்களுடைய அடித்தள வருடங்களில் ஆராதனையை தூக்கத்திலும், விளையாட்டிலும், பொழுதுபோக்கிலும் கழிக்காதவர்களாய் "வளர்ச்சி" அடையலாம் - அல்லது "புரிந்து கொள்ளக்கூடிய வயது வரும் வரை" வீட்டிலே விட்டு விடலாம். பிள்ளைகளை சரியான வழியில் பயிற்றுவிப்பது நம்முடைய பொறுப்பாகும். அப்போது தான் அவர்கள் பொறுப்புள்ளவர்களாகவும் ஆராதிக்கக்கூடிய வளர்ச்சியுடையவர்களாகவுமிருப்பார்கள்.

| பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|
| ❑ இஸ்ரவேல் தேசத்தாருக்கு | ❑ சகல தேசத்தாருக்கும் |
| ❑ ஓய்வு நாள் சனிக்கிழமை | ❑ கர்த்தருடைய நாள் ஞாயிறு |
| ❑ வாத்திய கருவிகளின் இசை | ❑ இருதயத்திலிருந்து பாடல் |
| ❑ மிருக பலிகள் | ❑ கிறிஸ்துவின் இரத்தம் |
| ❑ லேவியரிலிருந்து ஆசாரியர் | ❑ எல்லா விசுவாசிகளிலிருந்தும் |
| ❑ பத்தில் ஒன்று | ❑ மனவிருப்பத்தின்படி |

# பலவீனத்தில் யாக்கோபின் பெலன்

## Jacob`s Strength In Weakness

-P.R.Swamy



நண்பர்களே, வல்ல இயேசு கிறிஸ்துவின் இன்ப நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம். ஏசாவின் பலவீனத்தையும், அதை சாதகமாக்கிக் கொண்டு, தன் சகோதரனின் சேஷ்ட புத்திர பாகத்தை தந்திரமாக அபகரித்து கொண்ட யாக்கோபைப் பற்றியும் நாம் அறிவோம். யாக்கோபைப் பற்றிய உண்மை இவ்வளவு தான் என்றால், இந்த மனிதனைப் போய், நம் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்குடன் எப்படி சேர்த்தார்கள் என்று ஆச்சரியப்பட்டிருப்போம். ஒரு மனிதனின் வாழ்க்கையை, அவனது இளமைப் பருவத்தில் நடந்த ஒரு சிறு தவறை வைத்தோ, அவன் சமயோசிதம் இல்லாமல் செய்த ஒரு சிறு காரியத்தை வைத்தோ எடை போட முடியாது. அவன் தன் ஜீவிய ஓட்டத்தை ஓடி, பெரிய போராட்டங்களை சந்தித்த பிறகல்லவா அவனைப் பற்றி முடிவு செய்யக்கூடும். அவன் தகுதி என்ன என்பதை அவனுடைய முழு ஜீவியத்தை பார்த்த பிறகே தீர்மானிக்க முடியும்.

நம் யாக்கோபின் கதையைக் கேளுங்கள். ஏசா, தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து, தன் சகோதரன் யாக்கோபின் மேல் சீற்றங்கொண்டு அவனைக் கொல்ல எத்தனிக்கும்போது அவனிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஓடி விடுகிறான். தன் வருங்காலம் எப்படியோ என்று எதுவும் புரியாத நிலை அவனுக்கு, ஆனால் காயீனைப்போல மனிதர்கள் சமுகத்தை விட்டு ஓடிப்போக வேண்டிய நிலை இல்லை. தேவன் யோக்கோபை கை விட்டு விடவில்லை. ஆனால் யாக்கோபுக்கு இது மட்டும் தெரியாது. எண்ணிப்பாருங்கள்! ஒரு தவறைச் செய்துவிட்டு ஓடி ஒளிந்த நேரத்திலோ, வீட்டை விட்டு தனியாக ஒரு புதிய இடத்தில் இருக்கும் போதோ, பெற்றோரை விட்டோ, கணவனை விட்டோ, மனைவியை விட்டோ, எங்கோ சுற்றி அலைகின்ற நேரத்திலோ, தேவன் எம்மட்டும் கிருபையாக, மனமிரங்கி நம்மை வழி நடத்தி வந்திருக்கிறார். அவருடைய கிருபையே கிருபை.

ரெபெக்காளின் வேண்டுகோளின்படி, ஈசாக்கு யாக்கோபை, ஒரு பெண் கொள்ளும்படி பதான் அராமுக்கு அனுப்பி, "நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண் கொள்ள வேண்டும், உன் தாயின் முறையாரிடத்தில் மாத்திரம் பெண் கொள் என்று

கட்டளையிட்டான்" ஆபிரகாம் தேவனிடத்திலிருந்து பெற்ற வாக்குத்தத்தை யாக்கோபுக்கும் கொடுத்து, அவனை ஆசீர்வதித்து அனுப்புகிறான் (ஆதி.28:1-6). யாக்கோபு பெயர்செபாவை விட்டு புறப்பட்டு, ஆரானுக்குப் போகப் பிரயாணம் பண்ணி அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின் கீழ் வைத்து அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான், அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்.

இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதன் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவ தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று, "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும். நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய். உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்காத்து, இந்த தேசத்துக்கு உன்னை திரும்பிவரப் பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை" என்றார். யாக்கோபு மிகவும் பயந்து அவன் வழியெல்லாம் ஒரே திகிலாக இருந்த அந்தச்சமயத்தில் இந்த சொப்பனம் வந்தது. தேவன் யாக்கோபினிடத்தில் வந்து, அவன் சேஷ்ட புத்திர பாகத்தை உறுதிபடுத்தியதோடு, அதை சுதந்தரித்துக் கொள்ளுவதினால் அவனுக்கிருக்கும் பெரிய பொறுப்புகளையும் நினைவு படுத்தினார்.

இங்கு கவனியுங்கள். ஏசாவின் கோபத்தினின்று தப்பித்துக் கொள்ள யாக்கோபு ஓடிப்போனது, அவன் வாழ்க்கையிலே ஒரு பெரிய மாற்றத்தை தந்தது. அவன் பிரயாணத்தின் ஆரம்ப கட்டத்திலே தேவன் தம்மை அவனுக்கு வெளிப்படுத்தி, அவனோடுகூட இருப்பதாக வாக்குதத்தம் செய்து, ஏற்ற காலத்தில் அவனுடைய தகப்பனின் வீட்டுக்குத்திரும்ப கொண்டு வருவதாகக் கூறினார். அப்போதைய நிலையில், யாக்கோபை தேற்றுவது ஒரு புறமிருக்க, அதற்கு மேல் தாம், ஆபிரகாம், ஈசாக்கு இவர்களுக்கு கொடுத்த வாக்குதத்தத்தை இங்கு யாக்கோபுக்கு புதுப்பித்து, "உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும் உன் சந்ததிக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்றார். இது கிறிஸ்துவுக்குள்ளாக உலக முழுவதும் பெறும் ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது.

ஒரே இரவில் யாக்கோபுவிடம் ஒரு பெரிய மாறுதல். அவன் தாய் நினைத்திருந்தாள், யாக்கோபு ஒரு சில நாட்கள் தானே தங்களை விட்டு பிரிந்து இருக்கப்போகிறான் என்று, தான் 20 வருடங்கள் தன் வீட்டை விட்டு வெளியே இருப்பான் என்று அவனுக்குத் தெரியாது. பெத்தேலில் யாக்கோபு நித்திரை செய்த முதல் நாள் இரவு, அது அவன் வாழ்க்கையில் மறக்க முடியாத இரவு. அவன் நித்திரை தெளிந்து அடுத்த

நாள் விழித்தபோது, ஒரு பயபக்தி வந்துவிட்டது. மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேனே என்றான். தேவன் கடந்த இரவு அவனை சந்தித்திருக்கிறார். "நான் உன்னை கைவிடவில்லை" என்று அவனுக்கு தைரிய மூட்டியிருக்கிறார்.

யாக்கோபு ஒன்றும் இழிபிறயான மனிதன் அல்ல. தன் சகோதரனால் அற்பமாய் எண்ணப்பட்ட சேஷ்ட புத்திர பாகத்தையும், தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தையும் பெற விரும்பினான். பெத்தேலில் யாக்கோபு அந்த இரவை தனியாக கழித்தபோது, தன் நம்பிக்கைகள், தான் கண்ட கனவுகள் எல்லாம் அற்றுப் போய் விட்டதாக எண்ணி இருப்பான். சேஷ்ட புத்திர பாகத்தையும், ஆசீர்வாதத்தையும் தன் சகோதரனிடமிருந்து பறித்துக் கொண்டான். இருப்பினும் தன் குடும்பத்தை விட்டு விட்டதையும், தன் சேஷ்ட புத்திரபாகத்தையும் இழந்து விட்டதைப்போல எண்ணியிருந்திருப்பான். தன் தகப்பன் கொடுத்த அந்த ஆசீர்வாதமும் இந்த ஜென்மத்தில் நிறைவேறாதது போல் நினைத்திருபபான். அந்த இடம் எவ்வளவு வெறுமையாக, ஜனசஞ்சார மற்றதாகக் காணப்பட்டாலும், தேவன் அங்கு இருந்தார். பெத்தேல் ஒரு பசுமையான சம வெளியில் அமைந்திருக்கவில்லை மாறாக, வெறுமையான, வானாந்திரத்தைபோல் தோற்றமளிக்கும் இடத்தில் இருந்தது. அங்கு போய் ஒரு இரவை கழிக்க யாக்கோபு தேர்ந்தெடுத்திருக்கிறான் என்றால் பாருங்கள். ஆனாலும் ஒரு உண்மையை இங்கு சொல்லுகிறான். "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்" என்றான். தேவன் எங்கும் வியாபித்திருக்கிறார் எல்லா இடத்திலும் இருக்கிறார், தேவ சமுகம் இல்லாத இடம் எதுவும் இருக்க முடியாது.

அதைத்தான் தாவீதும், "நான் விடியற்காலத்து செட்டைகளை எடுத்து சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும் உமது வலது கரம் என்னைப் பிடிக்கும்" என்றார். நித்திரை தெளிந்து விழித்தபோது தேவன் தன்னை காப்பாற்றுவார், தன்னை வழி நடத்துவார் என்பதை அறிந்திருந்தான். பயத்தாலும், திகிலினாலும் நடு நடுங்கிப்போன யாக்கோபை தேவன் கவனித்துக் கொண்டிருந்தார். இந்த யாக்கோபின் பெயர்தான் இஸ்ரவேல் என்று தேவனால் மாற்றப்பட்டு, இந்த பெயரைத் தான் தேவனுடைய மக்கள் பெற்று, இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

பெத்தேலில் யாக்கோபு ஒரு பெரிய பாடத்தை கற்றுக்கொண்டான். தேவன் அவனை கைவிடவில்லை என்பதே அந்த பாடம். தேவனுடைய சமுகத்தை உணர்ந்த யாக்கோபு மகிழ்ச்சியடைந்து சொன்ன வார்த்தைகளைக் கேளுங்கள். "இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது. இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல இது வானத்தின் வாசல் என்றான்" ஆம்! தேவனுடைய பிள்ளையே, நாம் எங்கிருந்தாலும் சரி, எந்த சூழ்நிலையில் அகப்பட்டிருந்தாலும் சரி தேவ

சமுகத்தை உணரக்கூடிய நிலையில் நாம் இருந்தால், எந்த இடமானாலும் சரி நாம் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும். "எங்கே என் நாமத்தில் இரண்டு பேராவது மூன்று பேராவது கூடி இருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன்" என்று இயேசுகிறிஸ்துவும் வாக்குதத்தம் செய்திருக்கிறார்.

அதன்பின்பு யாக்கோபு, பிரயாணம் பண்ணி, தன் தாயின் சொந்த ஊர் வரை போய்ச் சேர்ந்தான். அங்கு தன் மாமன் வீட்டில் அடுத்த 20 ஆண்டுகள் தங்கியிருந்தான். அங்கு லாபானின் இரண்டு குமாரத்திகளான லேயாளையும், ராகேலையும் மணக்கிறான். லாபான் கொஞ்சம் அவனை ஏமாற்றி ராகேலுக்காக 14 வருடம் காத்திருக்கப் பண்ணினான். யாக்கோபின் கடுமையான உழைப்பு, லாபானின் குடும்பத்தை வளர்ச்சியடையச் செய்தது. யாக்கோபு, பிறகு தன் மனைவிமார்களையும், உடமைகளையும் எடுத்துக் கொண்டு, மாமனை விட்டு புறப்பட்டுப்போக எண்ணினான். ஒரு சில மனக்கசப்போடுதான் யாக்கோபு அவனை விட்டு வந்தான். தன் தேசத்திற்கு திரும்பும் போது, தன் சகோதரனான ஏசாவை சந்திக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. முதலில் பயந்தான். எப்படியோ சகோதரர்கள் பழைய பகையை மறந்து ஒப்புரவானார்கள். ஏசாவின் கோபமும் தணிந்தது. வழியில் யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையிலே, ஒரு தேவதூதனுடன் விடியுமளவும் போராடினான். தேவதூதன் யாக்கோபை ஆசீர்வதித்தான்.

அன்புள்ள நண்பனே மனிதனானவன் பலமும், பலவீனமும் உள்ளவன். பலமுள்ள காரியங்களை வலியுறுத்தி காட்டி விட்டு பலவீனங்களை மறைக்கப்பார்க்கிறோம். ஒரு சில பலவீனங்களைப் பார்த்துவிட்டு, ஒரு மனிதனை முற்றிலுமாக எடை போட முடியாது. யாக்கோபு கதையில், அவன் ஒரு பலவீனன்தான். என்றாலும் ஒவ்வொரு கட்டத்திலும் வாழ்க்கையின் பாடத்தை கற்றுக்கொண்டு, எப்படி விசுவாசத்தில் வல்லவனானான் என்று பார்த்தீர்களா! அப்படித்தான் நாமும், வாழ்க்கையில் போராடத்தக்க சமயம் வரும் போது மருண்டுவிட வேண்டாம். சில நல்ல பாடங்களை, போராடி பல வித கஷ்டங்களுக்கு மத்தியில் தானே கற்றுக்கொள்ளுகிறோம். பரிசுத்த வேதாகமத்தில் எவ்வளவு அறிவுரைகள் இருக்கின்றன. இவற்றை நாம் படித்து, அதன்படி நடந்தால் எவ்வளவு ஆசீர்வாதம். பிறருடைய அனுபவங்கள், நம்மைத் தேற்றி எச்சரித்து வழி நடத்துகின்றன. நீ உன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவர் பிள்ளையாக இவ்வுலகத்தில் ஜீவித்தால், உன் பலவீனத்துக்கு மத்தியிலும், ஒரு வெற்றியுள்ள கிறிஸ்த ஜீவியத்தை நடத்துவாய்.

– சத்திய வழி புத்தகத்திலிருந்து

**நடப்புச் செய்திகள்**

- ☐ரயில் கட்டணம் கண்டிப்பாக உயராது. ரயில்வே இணை அமைச்சர் உறுதி.
- ☐அந்தமான் அருகே கடலுக்குள் அடுத்தடுத்து பூகம்பம்
- ☐தமிழ் நாடு கிரிக்கெட் சங்கத்தலைவராக என்.ஸ்ரீனிவாசன் தேர்வு.

பெண்கள் பகுதி

# பெண்ணே நீ விழித்திரு

## Awake O Ye Woman

*- Saroja Swamy*



*ஏன் தான் பெண்ணாய்ப்*
*பிறந்தோமோ என*
*ஏங்காதே! இளம் பிறையே!*
*உனக்குள்ளே ஒரு*
*பூரணச் சந்திரன்*
*புதைந்து கிடக்கிறான்;*
*உலகை மாற்றலாம்*
*உறங்கி விடாதே*
*விழித்திரு பெண்ணே!*

காலம் பொல்லாததாய் இருப்பதால், விழித்திருங்கள் என்று கிறிஸ்தவர்களுக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது (எபே.5:14,16).

கர்த்தர், நம்மை விழித்திருக்கும்படி கூறுகிறார். ஏன் என்றால் ஆத்துமாக்கள் நாள்தோறும் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். நேரமோ பறந்து கொண்டிருக்கிறது. ஆதலால் உலகத்திற்கு, சத்தியத்தைப் பற்றிய விழிப்பும் தேவைப்படுகிறது. கிறிஸ்தவர்களுக்கு இவைகளைச் செய்யத் திறமையுண்டு. திறமை இருந்தால் மாத்திரம் போதாது. செயல் செய்யப்பட வேண்டும். இந்த உலகில் சிறந்த ஸ்தாபனம் என்று ஒன்று இருந்தாலும், அது இயங்காவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை அல்லவா!

நான் ஆராய்ந்து பார்த்ததில் கிறிஸ்தவ பெண்களிடத்தில் தான் அதிகத் திறமை இருப்பதாக காண்கிறேன். ஆனாலும் நாம் அவர்களுடைய உள்ளான திறமையை, அதாவது இயங்கும் சக்தியை தூண்டிவிடும் வரை, இதை கர்த்தருக்காக உபயோகிக்க மாட்டார்கள். சோம்பேறியான கிறிஸ்தவளிடத்தில் தேவன் பிரியமாயிருக்க மாட்டார்.

இயங்கக் கூடிய விசைகள் என்ன "மறைந்திருக்கும் வெளிச்சம்" இது கிறிஸ்தவர்களுக்குக்குள்ளே உபயோகம் பண்ணாமல் இருக்கும் சக்தியை விழிப்படையச் செய்து, கிரியைகள் செய்ய, வெளிச்சத்தைப் போல் உதவி செய்கிறது. உறக்கமுள்ள பரிசுத்தவான்கள் தங்களுடைய அடிப்படைப் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளும் பொழுது, அது முழு சபையையும் செயல்பட வைக்கும். அதன் முதல் பொறுப்பு ஆத்தும ஆதாயம் செய்தலாகும் (தானி.12:3).

நாம் தேவனுடைய கூட்டாளிகளாயிருந்து இந்த உயர்ந்த காரியத்தை, உலகம் அறிந்து கொள்ள செய்யவேண்டும். இழந்து

போனவர்கள், இரட்சிக்கப்பட வேண்டுமென்று போதிக்க எந்த ஒரு தேவதூதனுக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. ஆனால் மனிதனுக்கு மட்டும் தான் இந்த சிலாக்கியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மையாகவே இது வாழ்க்கையின் ஒரு சிலாக்கியமாகவும் ஒரு பகுதியாகவும் இருக்கிறது.

உறுதியாக, சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்றும், மேலும் நல்ல காரியங்களைக் குறித்த மகிழ்ச்சியான செய்திகளைக் கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது என்றும் ரோமர்10:15-ல் வாசிக்கிறோம். நம் கண்களால் காணக்கூடிய எல்லாப் பொருட்களும் ஒரு நாள் அழிந்து விடும். இரண்டு காரியங்கள் மட்டும் நிலைத்திருக்கும். ஒன்று பரலோகம், மற்றொன்று நரகம்.

மனிதனுடைய ஆத்துமாவை தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய கொண்டுவருவது வாழ்க்கையின் மிக முக்கியமான பணி. முதலில் நமக்கும் பிறகு மற்றவர்களுக்கும் போதிக்கப்பட உதவி செய்ய வேண்டும். ஆத்துமா, மிகவும் விலையேறப்பட்ட சொத்து; "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன என்று" மாற்கு8:36,37-ல் வாசிக்கிறோம்.

ஆத்தும ஆதாயம் செய்வதை விட்டு விட்டு, உலகப் பிரகாரமான பொருட்களைச் சேர்க்க மனிதன் முற்படுகிறான்.

ஆத்தும ஆதாயம் செய்ய வேண்டுமென்று, ஒரு மனிதனுக்கு, தான் மரித்து, பாதாளம் சென்ற பின்பு தான் ஆசை வந்தது.

இயேசு, சீமோனைப் பார்த்து, "இதுமுதல் நீ மனுஷர்களை பிடிக்கிறவனாய் இருப்பாய்" என்றார். மனுஷரைப் பிடித்தல் என்றால், உயிருள்ள மனிதர்களின் ஆத்துமாவை ஆதாயம் செய்வது.

நாம் காணும் ஒவ்வொரு பெண்ணுக்குள்ளும் ஆணுக்குள்ளும் சாகாமை உள்ள ஆத்துமா உண்டு. உயிரோடிருக்கும்போதே அவர்களுடைய ஆத்துமாவை தேவனுக்காகப் பிடிக்காவிட்டால், நித்தியத்தை அவர்கள் நரகத்தில் சாத்தானோடு தான் கழிப்பார்கள்.

சபைக்கு இரண்டு முக்கிய பணிகள் உண்டு. ஒன்று, ஆத்தும ஆதாயப்பணி (மத்.28:18-20). இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார்". "ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால் ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடு அப்படிப்பட்டவனை சீர் பொருந்தப்பண்ணுங்கள்" (கலா.6:1). சீர் பொருந்தப் பண்ணும் போது, மரணத்தினின்று ஒரு ஆத்துமாவை இரட்சிக்கிறோம் என்ற நிலை உண்டாகிறது.

சபையின் இரண்டாவது பணி, எளியோருக்கு உதவுதல் (யாக்.1:27). சரீரத்தைவிட ஆத்துமா விலையேறப்பெற்றது. மற்றவரின்

உலகப்பிரகாரமான தேவைகளை சந்திக்கும் பொழுது, அவர்களுடைய ஆத்துமாவை ஆதாயப்படுத்துவது சுலபமாகிவிடும்.

ஒவ்வொரு நிமிடமும் சுமார் 200க்கு மேற்பட்ட ஆத்துமாக்கள் இவ்வுலகத்தில் மரணத்தைச் சந்திக்கின்றனர். பல ஆத்துமாக்கள் நித்தியத்துக்கு ஆயத்தப்படாமல், இவ்வுலகத்தை விட்டு கடந்து செல்கின்றனர்.

எந்நேரமும் மரணத்தை சந்திக்கக்கூடிய நிலையில் பணிபுரியும் ராணுவவீரனுடைய பணிக்கு ஆத்தும ஆதாயப்பணி ஒப்பாயிருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் அநேக ஆத்துமாக்களை நாம் இழக்கிறோம் என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பலருக்கு சத்தியத்தைத் தெரிந்து கொள்ள ஆசையிருந்தும், அவர்களுக்கு அன்பாக எடுத்துப்போதிக்க ஆட்களில்லை. "அறுப்போ மிகுதி ஆட்களோ குறைவு".

சோகத்திற்குரிய காரியம் என்னவென்றால், "வலது புறமாய் கண்ணோக்கிப்பாரும், என்னை அறிவார் ஒருவருமில்லை; எனக்கு அடைக்கலமில்லாமல் போயிற்று, என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவருமில்லை" என்று புலம்புவது எவ்வளவு வேதனைக்குரிய காரியம் (சங்கீதம்142:4).

யோவான்5:2-9-ல் நாம் பார்க்கிற ஒரு மனிதன், பெதஸ்தா குளத்திற்குள் கொண்டு செல்ல, அவனுக்கு உதவ ஆளில்லாமல் இருந்ததைப் படிக்கிறோம். நண்பன் ஒருவன் இல்லாததால், குணப்படாமல் நின்றான். நானாக இருந்தால் அவனுக்கு உதவி செய்து இருப்பேன் என நீங்கள் கூறலாம். ஆனால் உதவிசெய்ய, சத்தியத்தைப் போதிக்க ஆளில்லாமல் எத்தனை பேர் மடிந்து போகிறார்கள் தெரியுமா? பகுத்து போதிக்க சிநேகிக்க ஒரு நண்பன் இல்லாமல் விலையேறப் பெற்ற ஆத்துமா நஷ்டப்பட்டுப் போகிறதே என்பதை நினைத்துப் பார்ப்போமானால், சுவிசேஷப் பணி எவ்வளவு முக்கியம், எவ்வளவு தீவிரமாகச் செய்யவேண்டிய பணி என்பது புரியும்.

இன்றைய உலகத்திற்கு இது ஒரு இன்றியமையாத தேவையாயிருக்கிறது.

"உறங்குகிறவர்களே விழித்து எழுங்கள்" ஆத்தும ஆதாயப் பணியை செய்ய விரைந்தோடுவோம். இழந்து போனவர்களுக்கு போதிக்க இயேசு நமக்கு கட்டளை கொடுத்து உள்ளார் (மத்.28:120).

கிறிஸ்த்வ ஜீவியத்தை ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிடலாம். ஓட்டப்பந்தயத்தின் ஆரம்பமாக விளக்குத் தேவைப்படுகிறது. விளக்கை தேவன் எரியச் செய்தார். பின்பு பரிசுத்த ஆவியின் மூலமாக வழி நடத்தப்பட்டு, அப்போஸ்தலர்கள் மூலமாக கிடைக்கப்பட்டன. அந்தப் பந்தய விளக்கானது நம் கைகளில் கொடுக்கப்பட்டுள்ள

வேதாகமமாகும். இந்த விளக்கை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது நம் கடமை. "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" எல்லோருமே ஆப்பிரிக்காவுக்கோ, சீனாவுக்கோ செல்ல முடியாது, ஆனால் நம் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் சத்தியத்தைப் பிரசங்கிக்க முடியுமல்லவா?

பாவம் ஆளுகை செய்யும் இந்த உலகத்திற்கு ஒரே பரிகாரம் கிறிஸ்துவின் இரத்தமே. பாவ நோயினால் சிக்கித் தவிப்பவர்களை வேறு எந்த மருந்தினாலும் குணப்படுத்த முடியாது. இப்படிப்பட்டவர்களுக்கு, கிறிஸ்தவர்களே மருத்துவர்களாகவும், அவர்களை குணப்படுத்தி, நித்தியத்திற்குரிய வழியைக் காண்பிக்கிறவர்களாகவும் இருக்க முடியும். பாவத்திற்கு ஒரே மருந்து கிறிஸ்துவின் இரத்தம் தான் என்று அறிந்திருந்தும், மற்றவர்களுக்கு இதை உணர்த்தத் தவறினால், நித்திய மரணம் தான் அவர்களின் முடிவாக இருக்கும்.

ஆத்தும ஆதாயம் செய்ய நம்மால் முடியும். நீ சிந்திப்பதைக் காட்டிலும் பெரிய காரியங்களைச் செய்ய உன்னால் முடியும் என்று உற்சாகப்படுத்த பலர் எதிர்பார்க்கிறார்கள். மோசே, எகிப்துக்குச் செல்ல வேண்டும் என்று தேவன் கூறியபோது; "என்னால் கூடாது" என்று மோசே கூறினான். தேவன் அவனை நோக்கி: "நீ போ, நான் உன்னை வழி நடத்துவேன், பார்வோனும், மற்ற பலரும் உனக்கு உதவி செய்வார்கள் என்றார்" மோசே, இவ்வார்த்தைகளைக் கேட்டு எகிப்துக்குச் செல்ல ஒத்துக்கொண்டான். மோசே தான் நினைத்ததைவிடப் பெரிய காரியங்களைச் செய்ய அவனால் முடிந்தது. அதனால்தான் மோசே, சரித்திரம் காணாத ஒரு பெரிய தலைவனாக இன்றும் பேசப்பட்டு வருகிறான்

நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளை நாம் உபயோகம் செய்யும்போது, அவை எண்ணிக்கையிலும், வல்லமையிலும் பெருகும். இந்தச் சவாலை ஏற்றுக் கொண்டு, ஆத்தும ஆதாயம் செய்ய தன்னை அர்ப்பணித்த கிறிஸ்தவள் கொஞ்ச காலத்தில், அவளுடைய சாதனைகள் அவளுக்கே வியப்பைத் தரும்.

**ஜெபியுங்கள்**

- ☆ 31வது மாவட்ட வாசகர் கருத்தரங்கிற்காக...
- ☆ தொலைக்காட்சி ஊழியத்திற்காக...
- ☆ வானொலி ஊழியத்திற்காக...
- ☆ மாத இதழ் ஊழியத்திற்காக...
- ☆ கர்த்தருடைய ஊழியத்தை நம்மோடு இணைந்து செய்கிற ஊழியர்களுக்காக...
- ☆ கர்த்தருடைய சபைகளுக்காக...
- ☆ விசுவாசகுடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட...



ஆத்தும ஆதாயம் செய்ய வயது வரம்போ, படிப்போ, சமுதாய அந்தஸ்தோ எதுவும் கிடையாது. எந்தத் தடையும் இல்லாத, இந்த தூய பணியைச் செய்ய நாம் எல்லோரும் உறுதிமொழி எடுப்போமாக. “என்னால் இயன்றதை நல்லபடியாக செய்தேன்” என்று ஒவ்வொருவரும் சொல்ல ஆயத்தப்படுத்தவேண்டும்.

ஆத்தும ஆதாயம் செய்பவர்கள், மற்றவர்கள் இருக்குமிடத்திற்கோ, வெகு தூரத்திற்கோ செல்லவேண்டிய அவசியமில்லை. நம் வீட்டின் கதவுகளைத் திறந்து நம் அயலகத்தார், சுற்றத்தார்கள் உள்ளே வர அனுமதித்தாலே கிறிஸ்துவைப் பற்றியும், இரட்சிப்பைப்பற்றியும் போதிக்கலாம்.

– சத்திய வழி புத்தகத்திலிந்து

## பொது அறிவுக் களஞ்சியம்

### சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (ILO)

தலைமையகம் ஜெனிவா

முக்கிய நோக்கம்: உழைப்பாளர்களின் தரத்தை உயர்த்தப் பாடுபடுதல், அவர்களுடைய பொருளாதார, சமூக நலன்களுக்குப் பாடுபடுதல் முதலியன.

1919 ஏப்ரல் 11-ல் உருவானது

**வேத அறிவுப்போட்டி எண் 94-ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| S. தண்டபாணி | -சிலுவத்தூர் |
| K. மோகன் | -கோமாரபாளையம் |
| N. விஜயநான்த் | -கோமாரபாளையம் |
| Mrs. மெர்சி டக்லஸ் | -கோவை |
| Mrs. மரகதம் திரவியம் | -கோம்பை |
| A. ஆனந்த் | -நாகமலை(மதுரை) |
| Mrs. மெல்சிடா | -திண்டுக்கல் |
| G. கிரேஸ் ஜெயா | -வெள்ளகுளம் |
| S. கிரேஸ் மேரி | -அரவக்குறிச்சி |
| S. பாக்கியராஜ் | -திண்டுக்கல் |
| R. சாமுவேல் | -ஊதியூர் |
| G.P. ஏசையன் | -கோபி |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (ஆந்திரா) |
| S. ஆனந்தராஜ் | -ஈரோடு |
| P.சரவணகுமார் | -புதுபாளையம் |
| G.பூங்கோதை | -கோபி |
| G.A.ஜான்சன் | -தலைமலைபட்டி |
| V.கோவலன் | -மதுரை |
| N.கமலவேணி | - சென்னை |
| J.நிர்மலா ஜான் | -மதுரை |
| S.சசி குமார் | -மணலி |

**வேத அறிவுப்போட்டி எண் 94-ன் விடைகள்**

1. ஓசியா -ஓசி.13:12
2. ஆவிக்கேற்றபடி -கலா.5:25
3. பலவான் -யோவே.3:10
4. பிசாசுக்கு -எபே.4:27
5. தீமையான -ஆமோ.5:13
6. பவுல் -பிலி.3:11
7. விழத்தள்ளுவேன் -ஒபதி.1:4
8. நிழலாயிருக்கிறது,கிறிஸ்துவை - கொலோ.2:16,17
9. யோனா -யோனா.2:7
10. தரித்துக்கொண்டிருக்கக்கடவோம் -1தெச.5:8

“கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்”
லூக்கா16:10

பெண்கள் பகுதி

# முதல் நூற்றாண்டில் முதன்மையான தம்பதியர்

## An Excellent Couple In The First Century

*- Glory Arjunan*



சகரியா, எலிசபெத். இவர்களை அறியாதவர்கள் உண்டா? நிச்சயமாக இருக்கமுடியாது. சகரியா என்பவன் ஒரு ஆசாரியனாக இருந்தான். அதாவது தேவனுக்கு பணிவிடை செய்யும் ஒரு ஊழியனாக செயல்பட்டான். அவன் மனைவி எலிசபெத் ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி. இவர்கள் இருவருமே தேவனுக்கு ஊழியஞ்செய்தவர்கள். ஆதாமுக்கு ஏற்ற துணையை கர்த்தர் உண்டு பண்ணினார் என்று ஆதியாகம புத்தகத்தில் படிக்கிறோம். எலிசபெத் சகரியாவுக்கு ஏற்ற துணையாக இருந்து ஊழியத்தில் உதவினாள். கர்த்தருக்கு பணிவிடை செய்தவர்களாக மட்டுமல்ல, இருவரும் ஒருமித்தவர்களாய் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாயுமிருந்தார்கள்.

கர்த்தருடைய தூதன் சகரியாவை நோக்கிக்கூறுகையில், 'சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' என்றான் *(லூக்.1:13)*. சகரியா ஊக்கமாக தேவனை நோக்கி ஜெபிக்கிற ஒரு தேவ மனிதனாக இருந்தான். இன்றைக்கு அதிகமான ஊழியர்கள் தங்களை வழி நடத்துகிற மூப்பர்களையே தஞ்சமாக எண்ணி அவர்களை நோக்கி காத்திருக்கின்றனர். ஆனால் இந்த சகரியாவோ தன் தேவனை நோக்கி வேண்டினான் அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. எலிசபெத்தும் தன் தேவனிடத்தில் மிகுந்த பக்தியுள்ள ஒரு ஸ்திரீயாகவும் இருந்திருக்கிறாள். இன்றைக்கு இப்படிப்பட்ட ஒருமனமுள்ள தம்பதிகள் கர்த்தருடைய ஊழியத்திற்கு தேவை. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அநேக தம்பதியர்களைக் குறித்து புதியஏற்பாட்டில் வாசிக்கிறோம். குறிப்பாக இயேசுவின் பிறப்பின்போது இருந்த இந்த தம்பதியர்கள் முதன்மையானவர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் ஆண்டவரின் பிறப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள். தங்கள் கைகளில் ஆண்டவரை சுமக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். மரியாள் தங்களோடு மூன்று மாதம் தங்கி இருக்கும் பாக்கியத்தை பெற்றவர்கள். இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது என தாவீது பாடின பாடலின் படி ஒருமித்து வாசம் செய்து தேவனை துதிக்கிற பாக்கியத்தைப் பெற்றவர்கள். என்னதான் உடன் பிறந்தவர்களாக இருந்தாலும் விருந்தோம்பல் என்பது ஒரு சில நாட்கள் தான். அதன் பின்பு அது கசப்பாகிவிடுகிறது. அதற்கும் மிஞ்சினால் சண்டையில் வந்து முடியும். ஆனால் தேவனுக்குள்ளாக இருக்கும் இந்த ஐக்கியம் எப்படிப்பட்டதென்று பாருங்கள். மூன்று மாதம் சகரியா வீட்டில் தங்கியிருந்தாள் என்றால் எவ்வளவு ஆசீர்வாதமான காரியம்.

மேலும், சகரியா எலிசபெத் ஒருமித்தவர்களாய் இருந்தார்கள் என்பதற்கு இன்னொரு சம்பவத்தையும் கூறலாம். எலிசபெத்தும் சகரியாவும் தன்னுடைய பிள்ளைக்கு யோவான் என்ற பெயரிட மனதாயிருந்தார்கள். ஏனெனில் இது தேவனால் கட்டளையிடப்பட்ட பெயர். தேவனுடைய கட்டளையை மீறாதவர்களாக தங்களுடைய உறவினர்கள் விருப்பத்தின்படி பேரிட மனதாயிராமல் இருவருமே யோவான் என பேரிட வேண்டுமென்றிருந்தார்கள் என வாசிக்கிறோம். "அப்பொழுது அதின் தாய் (எலிசபெத்): அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள். அதற்கு அவர்கள்: உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி, அதின் தகப்பனை (சகரியாவை) நோக்கி: இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி, இவன் பேர் யோவான் என்று எழுதினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" (லூக்.1:60-63). பாருங்கள், இந்த தம்பதியர் உறவினர்களின் விருப்பத்தைக் காட்டிலும் கர்த்தருடைய விருப்பத்தினைச் செய்வதில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்திருக்கிறார்கள்!

இச்செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரியே, நீங்களும் எலிசபெத்தைப்போல் உங்களுடைய கணவனோடுகூட ஒருமித்தவர்களாய் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாக இருக்கிறீர்களா அல்லது உறவினருடைய விருப்பத்தையே செய்கிறவர்களாக இருக்கிறீர்களா? எந்த ஒரு தம்பதியரும் தேவனுக்கடுத்த காரியத்தைச் செய்வதில் ஒருமனமுடையவர்களாக இருந்தால் தான் அந்தக் காரியத்தில் வெற்றிபெறமுடியும். சில சகோதரிகள் சின்ன சின்ன விஷயங்களில் கூட தன்னுடைய கணவனோடு ஒத்துப்போகமட்டார்கள். அப்படியிருக்கும் போது குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படும். சமாதானக்குறைவு உண்டாகும். ஆகையால் இயேசு சொல்வதைக் கவனியுங்கள்; "ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே" என்கிறார் (மாற்.3:25). உங்கள் வீடு நிலை பெற தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் இருந்தது மாத்திரமல்ல, "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" என்று வாசிக்கிறோம் (லூக்.1:6). இவ்வசனத்தில் கணவன் மட்டும் அல்லது மனைவி மட்டும் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்ததாக கூறப்படவில்லை. **அவர்கள் இருவரும்** கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து என்று எழுதப்பட்டுள்ளது. இருவருமே இந்த மேன்மையான காரியத்தை குற்றமற்றவர்களாய் செய்தார்களென்றால், நிச்சயமாக அவர்களுக்கு தேவன்பால் மிகுந்த அன்பும் பக்தியும் இருந்திருக்கவேண்டும். "கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத்

தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது" என்ற சங்கீதம்33:12-ன் படி இவ்விருவரும் கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக் கொண்டிருந்தனர். இவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அன்பு அன்பு என்று சொல்லுகிறோம் அந்த அன்பின் வடிவாக, சொருபியாக இருக்கும் தேவனுடைய வசனம் சொல்லுகிறது, "நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு" என்று (2யோவா.6). இந்தக்கற்பனையின் படி நடக்க சகரியாவும் எலிசபெத்தும் தவறவில்லை. இன்று இவ்விதமான தம்பதியரைக் காண்பது அரிதாயிருக்கிறது. ஆனால் முதல் நூற்றாண்டிலே பொய் சொல்வதில் ஒன்றுமையாக இருந்த அனனியா சப்பீராளைப்போல உள்ள தம்பதியரை காணமுடிகிறது.

பூமியிலே வாழ்க்கை என்பது ஒரு முறை தான். அந்த ஒரு முறை வாழக்கூடிய வாழ்க்கையில் இந்த சகரியா எலிசபெத் தம்பதியரைப் போல தேவனுடைய கற்பனைகளின்படியும் நியமங்களின்படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள். பவுல் சொல்லுகிறார்; "இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" (அப்.24:16). நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கப்போகிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கைப் பாதையில் முதல் நூற்றாண்டில் ஜீவித்த முதன்மையான தம்பதியரை மாதிரியாக நோக்குங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தையும், பெலத்தையும் உங்களுக்குத் தரும்படியாக ஜெபிக்கிறோம்.

## கிறிஸ்துவின் வசனம்

## மாத இதழின் 31வது வாசகர் கருத்தரங்கு

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு திண்டுக்கல் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களை அன்புடன் அழைக்கிறோம். அனுமதி இலவசம்.

**நோக்கம் :** ★ 1992 முதல் 2007 வரை வெளிவந்த இதழைக் குறித்த ஓர் ஆய்வு
★ 31வது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
★ எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு

**நாள் :** ஜூலை 26 - ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

**இடம் :** கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம், 17.2.102 D/5 ராஜன் நகர் , சார் பதிவாளர் அலுவலகத் தெரு,
வத்தலக்குண்டு - 624 202
திண்டுக்கல் மாவட்டம்,
தமிழ் நாடு, இந்தியா.

மேலும் விபரங்களுக்கு
தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
தபால் பெட்டி எண்.5
வத்தலக்குண்டு - 624 202
04543 263 278

*ஒருங்கிணைப்பாளர்,*
B. Arjunan 94435 58041

சிறுவர் பகுதி

# சாலொமோனின் ஞானமான தீர்ப்பு

**வேதபகுதி: 2இராஜாக்கள்3:16-28**



தாவீதுக்கு பின்பு சாலொமோன் ராஜாவாக இருந்தபோது இரண்டு வேசிகள் ஒரு பிரச்சனையை கொண்டு வந்தாங்க. அவர்களில் ஒருத்தி; என் ஆண்டவனே நானும் இந்த ஸ்திரீயும் ஒரே வீட்டிலே குடியிருக்கிறோம். நான் இவளோடே வீட்டிலிருக்கும்போது ஆண்பிள்ளையைப் பெற்றேன். இவளும் மூன்றாம் நாள் ஆண்பிள்ளையைப் பெற்றாள். எங்கள் இருவரைத் தவிர வீட்டில் வேறு யாரும் இல்லை. இவளோ தூக்கத்தில் புரண்டுபடுத்ததினால் அவளுடைய பிள்ளை செத்துப்போயிற்று. அப்பொழுது, உமது அடியாள் நித்திரை பண்ணுகையில் இவள் நடுஜாமத்தில் எழுந்து, என் பிள்ளையை எடுத்து தன் மார்பிலே கிடத்திக் கொண்டு செத்த பிள்ளையை எடுத்து என் மார்பிலே கிடத்திவிட்டாள்.

நான் என் பிள்ளைக்குப் பால் கொடுக்க காலமே எழுந்திருந்த போது அது செத்துக் கிடந்தது. பொழுது விடிந்த பின் நான் அதை உற்றுப் பார்க்கும்போது அது என் பிள்ளை இல்லை என்று தெரிந்து கொண்டேன் என்றாள். அதற்கு மற்ற ஸ்திரீ அப்படியல்ல உயிரோடிருக்கிறது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்றாள். இவளோ இல்லை இல்லை, செத்தது உன் பிள்ளை உயிரோடிருக்கிறது என் பிள்ளை என்றாள். இப்படி இருவரும் இராஜாவுக்கு முன்பாக வாதாடினார்கள்.

ராஜா ஒரு பட்டயத்தைக் கொண்டு வாருங்கள் என்றான். அந்தப்படியே பட்டயத்தைக் கொண்டு வந்தார்கள். உயிரோடிருக்கிற பிள்ளையை இரண்டாக பிளந்து, பாதியை இவளுக்கும் பாதியை அவளுக்கும் கொடுங்கள் என்றான். அப்பொழுது உயிரோடிக்கிற பிள்ளையினுடைய தாயின் குடல் துடித்ததினால், தன் பிள்ளைக்காக ராஜாவை நோக்கி, ஐயோ! என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையைக் கொல்ல வேண்டாம். அதை அவளுக்கே கொடுத்து விடுங்கள் என்றாள். மற்றவள் அது எனக்கும் வேண்டாம், அவளுக்கும் வேண்டாம் பிளந்து போடுங்கள் என்றாள்.

அப்பொழுது ராஜா உயிரோடிருக்கிற பிள்ளையின் தாய் யாரென கண்டு கொண்டு பிள்ளையைக் கொல்ல வேண்டாம் என்று சொன்ன அவளுக்கே கொடுத்து விடுங்கள். அவளே அதின் உண்மையான தாய் என்றாள். ராஜாவின் இந்த தீர்ப்பை கேள்விப்பட்ட யாவரும் தேவன் சாலொமேன் ராஜாவுக்கு அருளின ஞானத்தைக் கண்டு பயந்தார்கள். தம்பி, தங்காய் ராஜா, எப்படி உண்மையான தாயை கண்டுபிடித்தார் பார்த்தீர்களா! கர்த்தருக்குப் பயந்ததினாலே தேவன் சாலொமோனுக்கு இந்த விதமான ஞானத்தை கொடுத்திருந்தார். நாமும் கர்த்தருக்குப் பயந்து நடந்தால் இப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்றுக்கொள்வோம்.

**மனப்பாட வசனம்**

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" *(நீதி.1:7)*

## வேத அறிவுப் போட்டி எண்.95


***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

***கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. தரிசனங்காணக்கூடாத இராத்திரியும், குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும்; தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து, அவர்கள்மேல் பகல் எப்படியாய்ப்போகும்?
2. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காக எப்படி ஒப்புக்கொடுத்தார்?
3. விரும்பப்படாத ஜாதியே, கட்டளைபிறக்குமுன்னும், பதரைப்போல நாள் பறந்துபோகுமுன்னும் கர்த்தருடைய உக்கிரகோபம் உங்கள்மேல் இறங்குமுன்னும், கர்த்தருடைய கோபத்தின்நாள் உங்கள்மேல் வருமுன்னும், நீங்கள் உங்களை என்னசெய்து சோதியுங்கள்?
4. கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
5. அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் எப்படிப்போகும்?
6. ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, எதை விட்டு விலகிப்போவார்கள்?
7. வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று எவர் சொல்லுகிறார்?
8. உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்பது எவருக்கு நீதியாயிருக்கிறதே?
9. துன்மார்க்கன் நீதிமானை வளைந்துகொள்ளுகிறான் ஆதலால் நியாயம் என்ன செய்யப்படுகிறது?
10. தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாக சகிக்கிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?

**"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது" (1கொரி.13:13).**

**BATLAGUNDU CHRUCH OF CHRIST**



Meets Here

**ஆராதனை நேரம்**

ஞாயிறு காலை 8.30 மணி

தேவனை ஆவியோடும், உண்மையோடும், தொழுது கொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

17-2-102 D/5, Rajan Nagar
Batlagundu - 624 202,
Dindigul Dist

**உங்கள் வானொலியில்** இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

**உங்கள் தொலைக்காட்சியில்**

TAMILAN TV - Every Monday 6.00 a.m. VASANTH TV - Every Tuesday 6.30 a.m.
IMAYAM - Every Thursday 6.15 a.m.

**மாத இதழ் மற்றும் வேதபாடம்** தேவைக்கு உடனே ரூ. 15/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.

Radio &TV யில் வெளி வந்த தேவ செய்திகள் அடங்கிய CD & DVD க்கள் விற்பனைக்கு உள்ளது. தேவைப்படுவோர் ரூ.100/ அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்.


**THE WORD OF CHRIST**
P.O. Box. 5, Batlagundu - 624 202 S. India. ✆ 04543 263278, Mobile : 94435 58041
E-mail : thewordofchrist@sancharnet.in


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**

**மாத இதழின் ஆண்டு சந்தா**

இந்தியா ரூ. 50/- வெளிநாடு ரூ. 500/- தனிப்பிரதி ரூ. 5/-


Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar Batlagundu - 624 202. and Printed by R. Sathiyamoorthi at Bharathi Press, 14/13/24, Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan

Registered with Registrar of Newspapers for India under No. TN/SR- 164/ 2006-2008 Licensed to Post without prepayment License No. TN/WPP-25/SR/ 2006 - 2008 Posted at Batlagundu Post Office 10th July 2008


To

**Monthly Magazine**

From

Editor
THE WORD OF CHRIST
P.O. Box. No. 5
Batlagundu - 624 202
S. India